பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

29 10 2024 **TUESDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆண்டுக்கு பத்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ரோஜ்கர் மேளா வேலைவாய்ப்பு முகாம்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.
2. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 3 ஆயிரத்து 268 குடியிருப்புகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.
3. தமிழகத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நாளை பிற்பகல் அரைநாள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
4. தமிழகத்தில் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.
5. ஆஸ்திரேலிய சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி - ஸ்ரீவள்ளி ரஷ்மிகா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>

ஆண்டுக்கு பத்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ரோஜ்கர் மேளா வேலைவாய்ப்பு முகாம்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட 51 ஆயிரம் இளைஞர்களுக்கு அவர் காணொலி வாயிலாக பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

நாடு முழுவதும் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் ரோஜ்கர் மேளா வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெற்றன.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் 150 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நாடு விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக தெரிவித்தார்.

<u>*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 35 செகண்ட்)*</u>

மதுரையில் இன்று நடைபெற்ற மகா வேலைவாய்ப்பு முகாமில், 137 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி பேசிய மத்திய இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா. படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்வதில் மத்திய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்றும், எனவே அவர்களுக்கான வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கு பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆண்டுக்கு பத்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்காக கொண்டு வரப்பட்டுள்ள ரோஜ்கர் மேளா என்ற மகா வேலைவாய்ப்பு முகாம்களை இளைஞர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அஞ்சல் துறையில் 120 பேரும், ரயில்வேத்துறையில் ஏழு பேரும், புதுச்சேரி என் ஐ டி-யில் ஒன்பது பேரும், இந்திய உணவுக்கழகத்தில் ஒருவரும் என மொத்தம் 137 பேருக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் தென்மண்டல அஞ்சல்துறை தலைவர் திரு பி எஸ் ஜெய்சங்கர் கலந்துகொண்டார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் கன்னியாகுமரி மண்டலத்தில் அஞ்சலக ஊழியராக பணி ஆணையை பெற்றுக்கொண்ட சுகுமாரி, பணி வழங்கிய அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பயனாளிகள் - 16 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தின் சார்பில், 98 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஆறு புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

பெரும்பாக்கம், முடிச்சூர், அயனம்பாக்கம், வேளச்சேரி, சீக்கனான் ஏரிகளை மேம்படுத்துதல், மற்றும் வேளச்சேரி மேம்பாலப்பகுதியை அழகுப்படுத்துதல் உள்ளிட்டப்பணிகள் இதில் மேற்கொள்ளப்பட உள்ளன.

உயர்கல்வித்துறை சார்பில் 156 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

சென்னை, ஈரோடு, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 3 ஆயிரத்து 268 குடியிருப்புகளையும் முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நாளை பிற்பகல் அரைநாள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, மாநில அரசு விடுத்துள்ள அறிவிப்பில், நாளை முற்பகல் மட்டுமே பள்ளி, கல்லூரிகள் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் இன்று ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில், வரும் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று உள்ளபடி, தமிழகத்தில் மொத்தம் ஆறு கோடியே 27 லட்சத்து 30 ஆயிரத்து 588 பேர் உள்ளனர்.

இதில், 3 கோடியே 7 லட்சத்து 90 ஆயிரத்து 791 ஆண் வாக்காளர்களும், 3 கோடியே 19 லட்சத்து 30 ஆயிரத்து 833 பெண் வாக்காளர்களும் உள்ளனர்.

மூன்றாம் பாலினத்தவர் 8 ஆயிரத்து தொள்ளாயிரத்து 64 பேர் இடம் பெற்றுள்ளனர்.

அதிகபட்சமாக, செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதியில் 6 லட்சத்து 76 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம், ஆதார் எண் இணைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள அடுத்த மாதம் 16, 17, 23, 24 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வாக்குச்சாவடி மையம் அமைந்துள்ள இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த சிறப்பு முகாம்களில் உரிய படிவத்தை பூர்த்தி செய்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

அடுத்த மாதம் 28-ஆம் தேதிவரை, உரிய படிவத்தில் பூர்த்தி செய்து திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டில் வாழும் இந்திய குடிமக்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விசா, பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகலில் சுயசான்றொப்பம் இட்டு 6-ஏ படிவத்தில் விண்ணப்பிக்கலாம் என்றும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தீபாவளி பண்டிகைக்காக சொந்த ஊர் செல்வதற்கு வசதியாக சென்னையிலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நேற்று மட்டும் ஒரு லட்சத்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்களுக்கு அரசு பேருந்துகள் மூலம் சென்றுள்ளதாக கூறினார்.

இன்றும், நாளையும் ஐந்தரை லட்சத்திற்கும் மேற்பட்டோர் அரசு பேருந்துகளில் பயணம் செய்வார்கள் என்றும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

*(வாய்ஸ் டைட் - சிவசங்கர் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

சேலம் மாவட்டத்தில், 118 மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு, தீபாவளி பரிசுப்பொருட்களை மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று வழங்கினார்.

-----------------

விழுப்புரம் மாவட்டத்தில் நேரு யுவகேந்திரா சார்பில் என் பாரதத்துடன் தீபாவளி என்ற தூய்மைப்பணி இன்று நடைபெற்றது.

-----------------

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய தூய்மைப்பணியாளர் நல ஆணையத்தலைவர் திரு வெங்கடேசன் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

----------------

பெண்களுக்கான மார்பக புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா தனியார் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற பேரணியை கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

----------------

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தையொட்டி, திருவள்ளூர் லஞ்ச ஒழிப்புத்துறை துணை காவல் கண்காணிப்பாளர் திரு ராமச்சந்திர மூர்த்தி பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை தொடங்கிவைத்தார்.

----------------

நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் அரசினர் மகளிர் கலை கல்லூரியில், ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலிய சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி - ஸ்ரீவள்ளி ரஷ்மிகா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-4 என்ற செட் கணக்கில் தைவானின் **Yu Yun Li -** ஸ்லோவேக்கியாவின் **Nina** இணையை வென்றது.

----

நியூசிலாந்துக்கு எதிரான முன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் 233 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடி வரும் இந்தியா சற்றுமுன் வரை 16 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 65 ரன் எடுத்துள்ளது.

அகமதாபாத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து 49 புள்ளி ஐந்து ஓவரில், 232 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

<<<<<<END>>>>>